**தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை - 2021**

**..................................................................................**

1. **நிதிக்கூற்றுக்கள்**

**......................**

1.1 **முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

**.................................................**

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கிமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து அதிகார சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தும் வகையில் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 **முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

**.....................................................................**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 **நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினர்களின் பொறுப்பு**

**..............................................................................................................................................**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது அதிகார சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்நியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகார சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்நியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகார சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.

2018இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின்

பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

..........................................................................................................................................

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அதிகார சபையின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது அதிகார சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

### 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

.........................................................................................................

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடுகள்

..................................................................................................

கொடுக்கல் வாங்கல்களை முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்ப்படுத்துதல், தொடர்புபட்ட அறிகையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கதைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தலும் சொத்துக்களுக்காக கணக்கு நடவடிக்கைகளைப் பேணுதலும், முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதியப்பட்ட சொத்துக்களுக்காக கணக்கீட்டினைப் பேணுகின்ற சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது ஒப்பீடு செய்தலும் வித்தியாசம் காணப்படுமாகவிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்படுத்தலினைப் பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான “சிறப்பாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையினை நிறுவனத்தினால் பேணுதல் அத்தியவசியமானதாகும். பொதுப் பேரேடு, நாட்குறிப்பு வவுச்சர்கள், கொடுப்பனவு வவுச்சர்கள் முதலிய பிரதான கணக்கீட்டு அறிக்கைகளைப் பேணுவது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| ................................................ | ............................ | ............... |
| ஹம்பாந்தோட்டை மாவட்ட அலுவலகத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள வீரகெடிய மற்றும் ஹம்பாந்தோட்டை வலய அலுவலகங்களுக்கிடையே இடம்பெற்ற பண மாற்றல் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்வதற்கு பேணப்பட்ட பண மாற்றல் கணக்கில் 2019 ஆம் ஆண்டில் | பிழைகளை இனங்கண்டு நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் 2022 ஆம் ஆண்டின் போது சரிசெய்யப்பட்டது. | தலைமை அலுவலகத்திற்கும் மாவட்ட அலுவலகத்திற்குமிடை யிலான பண மாற்றல்கள் சம்பந்தமான கொடுக்கல் |

| | | |
|---|---|---|
| ரூபா 14.26 மில்லியனாக காணப்பட்ட செலவு மீதி 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 14.04 மில்லியனாக இருந்ததுடன் அது ஒட்டுமொத்த காசு மீதியிலிருந்து கழிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. இதன் காரணமாக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காசு மீதி அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. இந்த கணக்கு வைக்கும் தவறானது 2022 ஏப்ரல் 26 ஆந் திகதி சரிசெய்யப்பட்டிருந்தது. | | வாங்கல்களை சரியாக பதிவுசெய்தல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) ஏனைய தரப்பினர்களுக்கு ஒப்படைக்கமுடியாத அடிப்படையில் 1987 மற்றும் 1988 ஆம் ஆண்டுகளின் போது சுவீகரிக்கப்பட்ட ஹந்தானை ஓய்வு விடுதிக்குரிய 17.43 பேச்சர்ஸ் காணியை சுவீகரித்து 30 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் மீளாய்வாண்டின் இறுதிவரை அதன் பெறுமதி ரூபா 2,520 ஆக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 27 மற்றும் 47 ஆம் பந்திகளின் பிரகாரம் காணியின் பெறுமதியை நியாயப் பெறுமதியில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீட்டினைப் பெற்றுக்கொள்வதற்காக 2020/2/6 ஆந் திகதி மதிப்பீட்டுத் திணைக்களத்திற்குத் தெரியப்படுத்தப்பட்டது. மதிப்பீட்டினைப் பெற்றதன் பின்னர் சரியான பெறுமதியை ஏடுகளில் பதிவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | அதிகார சபைக்குரிய சொத்துக்களின் சரியான மதிப்பீட்டுப் பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 1985 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரையான காலம் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 237.92 மில்லியன் பெறுமதியான 134 மோட்டார் வாகனங்கள் மற்றும் 1990 ஆம் ஆண்டில் ஜப்பான் உதவியின் கீழ் கிடைத்த ரூபா 23.94 மில்லியன் கிரயமான 11 கருவிகளும் 2016 ஆம் ஆண்டிற்கு முன்னர் கொள்வனவு செய்த ரூபா 147.87 மில்லியன் கிரயமான உபகரணங்களும் | பல்வேறு வகுப்புக்களைச் சார்ந்த ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கிரயத்திற்கு அல்லது மீளளிப்புச் செய்த பெறுமதிக்கு கொண்டுவரப்படலாம் என்பது நியம இலக்கம் 1-92 இல் காட்டப்பட்டுள்ளது. அதற்கிணங்க கிரயத்தில் காட்டப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 92 (ஆ) இன் பிரகாரம் முழுமையாகப் பெறுமானத்தேய்வு செய்த எனினும் இன்னும் பணன்படுத்தப்படுகின்ற ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் இயலளவுப் பெறுமதியை |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 52.55 மில்லியன் கிரயமான தளபாடங்களும் பொருத்திகளும் உள்ளடங்கலாக ரூபா 462.28 மில்லியன் தொகையான சொத்துக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டு முடிவுறுத்தப்பட்டிருந்தது. அச்சொத்துக்களுக்கு மத்தியில் அதிகார சபையினால் இன்னும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற சொத்துக்களை மீள்மதிப்புச் செய்து இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 03 இன் 37 (உ) பந்தியின் பிரகாரம் மேற்கூறிய சொத்துக்களின் வினைத்திறனான ஆயுட்காலத்தை மீண்டும் மீளாய்வு செய்து கணக்குகளில் செம்ரமையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும். ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் சம்பந்தமாக இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 7 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 13 இன் பிரகாரம் அதிகார சபைக்குச் சொந்தமான வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு உள்ள ரூபா 1,119.56 மில்லியன் பெறுமதியான வீடுகளும் கடைகளும் முதலீட்டுச் சொத்துக்களாக இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யாது காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டில் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 13 இன் 20 ஆம் பந்தியின் பிரகாரம் இனங்காணப்பட்ட முதலீடுகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் பந்திக்கு இணங்க நிதி நிலைமைக் கூற்றில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

.......................................

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| | .................................................. | ............................. | ............... |
| (அ) | அதிகாரசபைக்குச் சொந்தமான வாடகைக்கு/குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள கடைகளின் எண்ணிக்கை 1,816 ஆக இருந்ததுடன் அவற்றில் 1,786 கடைகள் கொழும்பு மாவட்டத்தில் அமைந்துள்ளன. அவற்றிற்கு | ஆதனங்களின் பெறுமதிகளை மதிப்பீடு செய்யும் நடவடிக்கைக்காக மாவட்ட அலுவலகங்களிலிருந்து தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றது. | வாடகைக்கு அல்லது குத்தகைக்கு வழங்கப்படுகின்ற கடைகளின் பெறுமதியை மதிப்பீடு செய்து வாடகை தீர்மானிக்கப்பட வேண்டியதுடன் |

| | | | |
|---|---|---|---|
| | மத்தியில் 942 கடைகள் ரூபா 100 இனைவிட குறைந்த மாதாந்த வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன் இன்னும் 09 கடைகள் எதுவித குத்தகைப் பணமும் அறவிடப்படாது வெளிநபர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. மேலும் 744 கடைகளின் மாதாந்த வாடகை ரூபா 101 இற்கும் ரூபா 1000 இற்கும் இடைப்பட்ட பணத்திற்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. வாடகையை கணிக்கும் போது ஆதனத்தின் பெறுமதியில் 04 சதவீதமான பெறுமதி அல்லது தேறிய வருமானத்தின் மீது 4 சதவீதம் என்ற பெறுமதிகளில் குறைந்த பெறுமதி குத்தகை வாடகையாகக் கருதப்பட வேண்டியதுடன் ஒவ்வொரு 02 ஆண்டுகளுக்கு ஒரு தடவை குத்தகை உடன்படிக்கையை புதுப்பித்தல் வேண்டும். அதிகார சபையின் கடைகளை குத்தகைக்கு வழங்கும் போது குத்தகை வாடகை அவ்வாறு மதிப்பீடு செய்யப்பட்டிருக்காததுடன் கொழும்பு மாவட்டத்திலுள்ள கடைகளில் 89 சதவீதமானவை அதாவது 1,582 கடைகளின் குத்தகை உடன்படிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து நாளதுவரையாக்கப்பட்டிருக்க வில்லை. அதற்கிணங்க நிகழ்கால மதிப்பீட்டுப் பெறுமதிக்கு வாடகைக்கு/ குத்தகைக்கு வழங்கப்படாமையால் அதிகார சபையினால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | | வாடகை உடன்படிக்கை நிபந்தனைகளுக்கு இணங்க புதுப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | அதிகாரசபையின் வீடமைப்புத் திட்டத்துடனான காணிகள், வெற்றுக்காணிகள், அனுமதியற்ற ஏனைய தரப்பினர்களால் பயன்படுத்தப்படுகின்ற 473.15 ஹெக்டயர் அளவான காணிகளின் 8,286 காணிப் பகுதிகளின் பெறுமதி மற்றும் அதிகார சபையின் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 565.05 மில்லியன் கிரயமான | மாவட்ட அலுவலகங்களிலிருந்து காணிகள் தொடர்பான விபரத்தினைப் பெற்றுக்கொண்டு பெறுமதிகள் மதிப்பீடு செய்யப்படும். | அதிகாரசபையின் அனைத்து காணிகளின் அளவினை சரியாக இனங்கண்டு உரிய பெறுமதிகளை மதிப்பீடு செய்து வாடகையை தீர்மானிக்க வேண்டியதுடன் வாடகை |

| | | |
|---|---|---|
| அலுவலக மற்றும் வாடகை அடிப்படையில் வழங்கப்பட்ட கட்டிடங்கள் அமைந்துள்ள காணிகளின் அளவினை சரியாக இனங்கண்டு அக்காணிகளின் பெறுமதியை மதிப்பீடு செய்து நியாயமான பெறுமதிக்கு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | உடன்படிக்கை நிபந்தனைகளுக்கு இணங்க புதுப்பித்தல் வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை
**.....................................................................................**

| | **விடயம்** | **தொகை** | **வழங்கப்படாத கணக்காய்வு சான்று** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|---|---|
| | **.............** | **......** **(ரூபா மில்லியன்)** | **....................** | **......................** | **..............** |
| (அ) | தோட்ட வீடமைப்பு ஒப்பந்த வைப்பு கொடுப்பனவுகள் | 254.89 | விபரமான பட்டோலை | மாவட்ட அலுவலகங்களிலிருந்து பெற்று சமர்ப்பிப்பேன். | ஒப்பந்த வைப்புக்காக போதியளவான விபரமான பட்டடாலை சமர்ப்பித்தல் வேண்டும். |
| (ஆ) | கடன் கொடுத்தோர், கடனுக்கான நடை முறைப் பொறுப்புக்கள் மற்றும் வைப்புக்களுக்கான 32 செலவு மீதிகள் | 1,995.45 | விபரமான பட்டோலை | -மேற்படி- | போதியளவான மற்றும் உரிய விபரமான பட்டோலை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | உள்நாட்டு மானியம் | 1,849.31 | விபரமான பட்டோலை | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | 09 கடன்கொடுத்தோர் | 1,118.12 | மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் | நிறுவனத்திற்குச் சமர்ப்பிக்குமாறு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | மீதிகளை உறுதிப்படுத்தி கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

.......................................................................................................

### 1.6.1 பெறவேண்டிய பணம்

.......................................

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்ட கடன் மீதிகளில் 15 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் அறவிடப்படாத கடன் ரூபா 1,476.8 மில்லினாக இருந்ததுடன் 05 ஆண்டுகளை மிகைத்த ரூபா 1,068 மில்லியன் பெறவேண்டிய கடன் மீதியை சேகரித்துக்கொள்வதற்கு அதிகாரசபைக்கு மீளாய்வாண்டின் இறுதிவரை முடியாதிருந்தது. | கடன் பணத்தை அறவீடு செய்வதற்காக பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்படும். | அறவிடாது காணப்பட்ட கடனை அறவீடு செய்வதற்காக நடைமுறைக்குச் சாத்தியமானதும் முறைப்படியானதுமான ஒரு நடைமுறையினை அறிமுகப்படுத்தி அமுல்ப்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) கண்டி மாவட்டத்திலுள்ள 20 பிரதேச செயலகப் பிரிவுகளின் 8817 நலன்பெறுனர்களிடமிருந்து 2021 செப்தெம்பர் 30 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடவேண்டிய பணம் ரூபா 236.15 மில்லியனாக இருந்ததுடன் அதில் 1461 நலன்பெறுனர்களிடமிருந்து அறவிட வேண்டியிருந்த ரூபா 82.04 மில்லியனானது 2021 செப்தெம்பர் 30 ஆந் திகதியில் உள்ளவாறு 03 ஆண்டுகளை மிகைத்து நிலுவையாகக் காணப்பட்டிருந்தது. மேலும் ரூபா 115.26 மில்லியன் 1 ஆண்டிற்கும் 3 ஆண்டுகளுக்குமிடைப்பட்ட காலத்திற்குள் 3828 நலன்பெறுனர்களிடமிருந்து அறவிடவேண்டிய போதிலும் அப்பணத்தை அறவீடு செய்வதற்காக முறையான வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டவாறு | இடம்பெற்றுள்ள பிழைகள் சரிசெய்யப்பட்டு நாளதுவரையாக்கப்பட்டுள்ளது. 20 பிரிவுகளின் கீழ் பதவியணியினர்கள் அறவீட்டினை மேம்படுத்தும் கடமைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். | வழங்கப்பட்ட கடனும் அறவீடுகளும் சரியாகவும் நாளதுவரையாகவும் பேணவேண்டியதுடன் முறையான கடனை அறவீடு செய்யும் நடைமுறையும் பின்பற்றப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கண்டி தோட்ட வீடமைப்பு கடன் பதிவேட்டின் பிரகாரம் 2021 செப்தெம்பர் 03 ஆந் திகதியில் உள்ளவாறு 14 நலன்பெறுனர்களிடமிருந்து கடன் மீதிகளின் மொத்தம் மாதாந்தம் கடனை அறவீடு செய்யும் அறிக்கைக்கு இணங்க அறவிட வேண்டிய கடன் பணத்தினை விட ரூபா 1.045 மில்லியன் மிகையாக காட்டப்பட்டிருந்ததுடன் 12 சந்தர்ப்பங்களின் போது அறவிடவேண்டிய கடன் மீதிகளின் மொத்தம் ரூபா 1.57 மில்லியன் குறைத்துக் காட்டப்பட்டிருந்ததனால் கடனை அறவீடு செய்தல் சரியாகவும் நாளதுவரையாகவும் பதியப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) | வீட்டுத் தொகுதிகளை திருத்தம் செய்வதற்கான 73 ஒப்பந்தங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 514.14 மில்லியன் முற்பணங்கள் 1 ஆண்டிலிருந்து 5 ஆண்டுகள் வரையான காலம் கடந்திருந்தும் தீர்த்துவைத்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொறியியல் பிரிவுடன் ஒன்றிணைந்து தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | முற்பணங்களின் கீழ் செயற்பாடுகள் முடிவுறுத்தப்பட்டிருக்கையில் அவற்றினை தீர்த்துவைத்து கணக்கீடு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை தாமதமின்றி மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஈ) | வீட்டு ஊடக பிரிவிற்கு 2011 இலிருந்து 2020 வரையான காலத்தில் பிரசித்தப்படுத்தல் அறிவித்தல்களுக்காக 22 அரசாங்க கூட்டுத்தாபனங்களை உள்ளடக்கிய 27 நிறுவனங்களிடமிருந்தும் 03 கம்பனிகளிடமிருந்தும் அறிவிட வேண்டிய மொத்தமாக ரூபா 15.97 மில்லியனை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரை முடியாதிருந்தது. | உரிய நிறுவனங்களுடன் கலந்துரையாடி கொடுப்பனவு செய்யுமாறு வேண்டிக் கொள்ளப்பட்டது. | பெறவேண்டிய மீதிகளை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6.2 செலுத்தவேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 05 ஆண்டுகளை மிகைத்த ரூபா 1,495.73 மில்லியன் செலுத்த வேண்டிய மீதி மீளாய்வாண்டின் இறுதி வரை தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | கடன்கொடுத்தோர்களை இனங்கண்டு கொடுப்பனவு செய்வதற்கு அல்லது முறையான அங்கீகாரத்தின் கீழ் வேண்டப்படாத கடன் வருமானத்திற்கு எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | | | |
| (i) II ஆவது அத்தியாயத்தின் 13.3 ஆம் பிரிவு | நிரந்தர நியமனம் செய்யப்படும் வரையான தற்காலிக பரிகாரமாக மாத்திரம் பதில் கடமை நியமனங்கள் செய்யப்பட வேண்டியதுடன் பதவிக்கு முழுநேர உத்தியோகத்தரின் சேவை அத்தியவசியமானதாக இருக்குமாயின் நிரந்தர நியமனத்தை தாமதமின்றி செய்ய வேண்டியதுடன் முழு நேர உத்தியோகத்தர்களின் சேவை அவசியமற்றதாயின் ஏனைய உத்தியோகத்தர்களுக்கிடையே கடமைகள் பகிர்ந்தளிக்கப்படுதல் | ஆட்சேர்ப்பு தாமதமடைந்ததன் காரணமாக பதில் கடமை நியமனங்கள் வழங்கப்பட்டன. | தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வேண்டும். எனினும் 17 பதவிகளுக்கான பதில் கடமை பார்த்தல் 01 ஆண்டிலிருந்து 06 ஆண்டுகள் வரை நீண்ட காலமாக இடம்பெறுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (ii) | தாபனவிதிக் கோவையினக் XLVIII ஆவது அத்தியாயத்தின் 13.3 ஆம் பிரிவு | தொடக்க புலனாய்வு 02 மாதங்களிலும் குற்றப்பத்திரிகையுடனான ஒழுக்காற்று விசாரணை 06 மாதங்களிலும் முடிவுறுத்தப்பட வேண்டிய போதிலும் அதிகார சபையில் வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட 07 உத்தியோகத்தர்கள் தொடர்பான குற்றப்பத்திரிகையினை வழங்குவதற்கு 05 மாதங்களிலிருந்து 15 மாதங்கள் வரையான காலம் கடந்திருந்ததுடன் 15 குற்றங்கள் சம்பந்தமாக ஒழுக்காற்று விசாரணைகளை ஆரம்பித்து முடிவுறுத்துவதற்கு 09 மாதங்களுக்கும் 27 மாதங்களுக்கும்இடைப்பட்ட காலம் எடுத்திருந்தது. மேலும் அதிகார சபையினால் முடிவுறுத்தப்பட்ட 13 ஒழுக்காற்று விசாரணைகள் சம்பந்தமாக கட்டளைகளை வழங்குவதற்கு ஒழுக்காற்று விசாரணை முடிவடைந்த திகதியிலிருந்து 11 மாதங்களுக்கும் 74 மாதங்களுக்கும் இடைப்பட்ட வீச்சுடைய காலம் எடுத்திருந்தது. | முடிவுறுத்தப்பட்டுள்ள ஒழுக்காற்று விசாரணைகளுக்காக கட்டளைகள் வழங்கப்பட்டு வருகின்றன. | தாபன விதிக் கோவை மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் ஒழுக்காற்று விசாரணைகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| | நிதிப்பிரமாணம் 135 (4) | அதிகாரத்தை ஒப்படைத்தலானது ஏதாவது நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்கு ஒரு தடவை திருத்தம் செய்யப்பட வேண்டிய போதிலும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டவாறு அதிகார சபையினால் 2019 ஆம் ஆண்டில் நிதி அதிகாரத்தினை ஒப்படைத்தலானது 2016 அதிகார ஒப்படைப்பு அறிக்கைக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டது. அதற்கிணங்க அதன் அதிகார வரம்புகளின் கீழ் இலக்கம் 2(இ) இன் பிரகாரம் தலைமை அலுவலகத்தின் உதவி பொது முகாமையாளர் (நிதி, சிரேஷ்ட முகாமையாளர் (நிதி), சிரேஷ்ட கணக்காளருக்கு கணக்குகளுக்கு இடையே பணத்தை பரிமாற்றம் செய்யும் கடிதத்தில் கையொப்பமிடும் எல்லை ரூபா 05 மில்லியனாக இருந்த போதிலும் எல்லையினை மிகைத்து 58 சந்தர்ப்பங்களின் போது மொத்தமாக ரூபா 1,522.81 மில்லியனை மாற்றம் செய்வதற்காக கையொப்பமிடப்பட்டிருந்தது. மேலும் மாவட்ட | 2016 அதிகார ஒப்படைப்பு அறிக்கைக்கு இணங்க அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க எல்லைகள் மிகைக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த அதிகார ஒப்படைப்பு சம்பந்தமாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அலுவலகங்களினதும் வலய அலுவலகங்களினதும் கணக்குகளுக்கிடையே பணத்தை மாற்றம் செய்யும் கடிதத்தில் கையொப்பமிடும் எல்லை ரூபா 02 மில்லியனாக இருந்த போதிலும் 111 சந்தர்ப்பங்களின் போ அந்த எல்லையினை மிகைத்து மொத்தமாக ரூபா 2013.11 மில்லியன் ஹம்பாந்தோட்டை மாவட்ட அலுவலகத்திலிருந்து மாற்றப்பட்டிருந்தது. | | |
| (இ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 11(பீ) பிரிவு | மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட மொத்தமாக ரூபா 683.5 மில்லியன் குறுங்கால மாற்றும் நீண்ட கால முதலீடுகள் சம்பந்தமாக நிதி அமைச்சரின் இணக்கப்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. வீடுகளை எதிர்பார்க்கும் ஏழைக் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக செவன நிதியத்திலிருந்து கிடைத்த ரூபா 375 மில்லியனும் அதனுள் உள்ளடக்கப்பட்டிருந்தது. | நிதி அமைச்சிற்கு சமர்ப்பிப்பதற்காக வரிசை அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | தேவையான அங்கீகாரங்களை நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் பெற்று முதலீடு செய்தல் வேண்டும். |
| (ஈ) | 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கை | பயன்படுத்துவதிலிருந்து அகற்றப்பட்ட வாகனங்களை இனங்கண்டு கைதவிர்ப்புச் செய்யும் நடவடிக்கை ஒவ்வொரு ஆண்டின் மார்ச் 31 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2017 ஆம் ஆண்டிலிருந்து கைதவிர்ப்புச் செய்யப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்ட 33 | வாகனங்களை கைதவிர்ப்புச் செய்யும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. | சுற்றிக்கை அறிவுறுத்தல்களுக்கு இணங்க உரிய ஆண்டிற்குள் கைதவிர்ப்புச் செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | வாகனங்களில் 06 வாகனங்கள் 2022 ஒக்தோபர் 30 ஆந் திகதி வரை கைதவிர்ப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான அதிகார சபையின் மற்றும் தொகுதியின் செயற்பாட்டு விளைவுகள் முறையே ரூபா 842 மில்லியன் மற்றும் ரூபா 450 மில்லியனான பற்றாக்குறையாக அவதானிக்கப்பட்டதுடன் அதற்கு நோரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை முறையே ரூபா 1,026 மில்லியன் மற்றும் ரூபா 596 மில்லியனாக இருந்தது. அதற்கிணங்க அதிகார சபையின் மற்றும் தொகுதியின் நிதி விளைவுகளில் முறையே ரூபா 184 மில்லியன் மற்றும் ரூபா 146 மில்லியன் முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றம் தொடர்பாக பிரதானமாக அதிகார சபையின் ஏனைய வருமானம் ரூபா 2,433 மில்லியனால் அதிகரித்தல் காரணமாக இருந்தது.

**2.2 பிரதான வருமானம் செலவு விடயங்களின் போக்கு பகுப்பாய்வு**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது அதிகார சபையின் நிதி விளைவுகளில் தொடர்ச்சியான பற்றாக்குறை சுட்டிக்காட்டப்பட்டது.

**2.3 விகிதாசார பகுப்பாய்வு**

மீளாய்வாண்டின் இறுதியில் அதிகார சபையின் நடைமுறை விகிதம் 2.3:1 மற்றும் விரைவு விகிதம் 2.28:1 ஆக இருந்ததுடன் கடந்த ஆண்டின் போது முறையே 2.15:1 மற்றும் 2.14:1 ஆக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) 2015 - 2019 காலப்பகுதியில் அச்சிடப்பட்ட ரூபா 2.12 மில்லியன் பெறுமதியான விபரப் பத்திரிகை மற்றும் 18 வீட்டு மானிய பத்திரிகைகள் தொடர்பான கடித உறைகள் மற்றும் பதாதை இருப்புக்கள் விளைவற்று களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததுடன் பல ஆண்டுகளாக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளாமையால் பயன்பாட்டிற்கு | அப்போது அமுல்ப்படுத்தப்பட்ட வீடமைப்புச் செயற்திட்டதிற்காக இந்த அச்சிடல்கள் மேற்கொள்ளப்பட்டன. அந்த மிகுதியான இருப்புக்கள் தொடர்பாக தீர்மானம் எடுப்பதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. அதன் தீர்மானத்தின் பிரகாரம் மிகுதி | பத்திரிகைகளை அச்சிடும் போது தேவைப்பாட்டினை முறைப்படியாக இனங்காண வேவண்டியதுடன் அவற்றினை திட்டமிட்டவாறு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எடுத்துக்கொள்ளமுடியாத நிலைக்கு மாறியிருந்தது. மேலும் களஞ்சிய இடவசதிகள் தேவையற்ற வகையில் பிடித்து வைத்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன் களஞ்சிய கட்டுப்பாடு பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது என்பதுவும் அவதானிக்கப்பட்டது. | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. | |
| (ஆ) | ரூபா 06 இலட்சம் வீதம் 720 வீட்டு நலனாளிகளுக்கு வழங்கப்பட்ட ரூபா 4,320 மில்லியன் வீடமைப்பு கடன்களில் நிர்ணயிக்கப்பட்ட 288 மாதிரிக் கிராமங்களின் வீடுகளை மக்களின் உரிமைக்கு ஒப்படைத்தல் விழா சம்பந்தமான பத்திரிகை அறிவித்தலினை வெளியிடுவதற்கு 2015- 2019 காலப்பகுதியில் வீட்டு ஊடக பிரிவினால் ரூபா 307.7 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. | அரசியல் அதிகாரிகள் மற்றும் உயர் முகாமைத்துவத்தின் தெரியப்படுத்தலின் பேரில் அறிவுறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டது. | வீடுகளை இழந்த நபர்களுக்கு வீடுகளை நிர்மாணிப்பதற்கு ஒதுக்கப்பட்ட பணத்தை அதற்காக செலவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (அ) | அதிகாரசபையின் விற்பனை செய்வதற்காக அல்லது வடகைக்கு/குத்தகைக்கு வழங்குவதற்காக உள்ள 117 வீடுகள் மற்றும் கடைகளில் 34 வீடுகள் மற்றும் கடைகளில் அதிகாரமற்றவர்கள் குடியிருத்தல், பயன்படுத்துவதற்கு பொருத்தமற்ற நிலையில் காணப்படல் போன்ற காரணங்களின் அடிப்படையில் விற்பனை செய்வதற்கு அல்லது வாடகைக்கு/குத்தகைக்கு வழங்குவதற்கு முடியாத நிலையில் காணப்பட்டதுடன் கணக்காய்வுத் திகதியான 2022 மே 25 ஆந் திகதி வரை அவற்றினைத் | பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. பெறுமதிகள் கிடைத்த உயர்ந்த விலைகளின் கீழ் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அரசாங்கத்தின் பணத்தை செலவு செய்து நிர்ணயிக்கப்பட்ட முதலீட்டு ஆதனங்களுக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தீர்த்துவைப்பதற்கு அதிகார சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | தலைமை அலுவலகத்தின் நிதிப்பிரிவு ஆதனப் பிரிவு மற்றும் மாவட்ட அலுவலகங்களின் மூலம் வீடுகள் மற்றும் ஆதனங்கள் தொடர்பாக தனித்தனியான தரவுகளை பேணி வந்திருந்தும் விற்பனை செய்வதற்கு/வாடகைக்கு வழங்குவதற்கு/ குத்தகைக்கு வழங்குவதற்கு உள்ள வீடுகள் மற்றும் கடைகளின் அலகு எண்ணிக்கைகளை இனங்காணக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்ட மத்தியப்படுத்தப்பட்ட ஒரு பதிவேடு அதிகார சபையினால் பேணப்பட்டிருக்கவில்லை. | விற்பனை செய்வதற்கு/வாடகைக்கு வழங்குவதற்கு குத்தகைக்கு வழங்குவதற்குள்ள வீடுகள் சம்பந்தமான மத்தியப்படுத்தப்பட்ட ஒரு பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு வருகின்றது. | உரிய ஆதனங்களை சரியாக இனங்கண்டு முடியுமான அளவிற்கு தேவையான தகவல்களை உள்ளடக்கிய மத்தியப்படுத்தப்பட்ட ஒரு பதிவேட்டினை தயாரித்து பேணுதல் வேண்டும். |
| (இ) | 2016 ஒக்தோபர் 14 ஆந் திகதிய 16/2040/701/032 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் மாதிரிக் கராமங்கள் செயற்திட்டத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டில் அதாவது ஒரு கிராமத்திற்கு 25 வீடுகள் வீதம் 12,500 வீடுகளை உள்ளடக்கிய 500 செயற்திட்டங்கள் ரூபா 6,250 மில்லியனுக்கு நிர்மாணிக்கப்பட்டு முடிவுறுத்தப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. 04 ஆண்டுகள் கடந்திருந்தும் மீளாய்வாண்டின் இறுதிவரை நிர்மாணித்து முடிவுறுத்தப்பட்டிருந்த மாதிரிக் கிராமங்களின் எண்ணிக்கை 368 ஆக இருந்ததுடன் அதன் கீழ் நிர்ணயிக்கப்பட்ட மொத்த வீடுகளின் எண்ணிக்கை 10,159 ஆக இருந்தது. அதற்காக ரூபா 4,798 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. மேலும் இந்த மாதிரிக் கிராம செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற 2,499 வீட்டு அலகுகளுக்காக | மக்கள் உரிமைக்கு மாற்றப்பட்டிருந்த செயற்திட்டங்களின் எண்ணிக்கை 369 ஆகும். மேலும் பூர்த்தி செய்யக்கூடியது 04 செயற்திட்டங்கள் மாத்திரமாகும். இதற்காக திறைசேரி நிதி ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்யவில்லை. | தொடர்ச்சியான செயற்திட்டங்களுக்கு தேவையான நிதி ஏற்பாட்டினைப் பெற்று பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் போது ரூபா 163.90 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தும் 07 மாவட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 84.3 மில்லியனில் செலவு செய்யப்பட்ட பணம் ரூபா 47 மில்லியன் மாத்திரமாக இருந்தது. | | |
| (ஈ) | மேற்கூறிய மாதிரிக் கிராம செயற்திட்டத்தின் கீழ் வீரகெடிய பிரதேச செயலகப் பிரிவில் நிர்மாணிக்கப்பட்ட 186 வீடுகள் சம்பந்தமாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது நலன்பெறுனர்களைத் தெரிவுசெய்வதற்கு முறையான நடைமுறையின்றி காணிகளை உரிமையாகக் கொண்ட 66 நபர்களுக்கு அதாவது 35 சதவீதத்திற்கு காணிகள் வழங்கப்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. மேலும் கடன் பணத்தினை முறைப்படியாக கட்டம் கட்டமாக பெற்றுக்கொள்ளாமையின் காரணமாக 2018/2019 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 06 மாதங்களில் பூர்த்திசெய்யப்பட வேண்டியிருந்த 176 வீடுகளுக்கு அதாவது 26 சதவீதமானவை 2021 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் தொடர்ச்சியாக நிர்மாணிக்கப்பட்டு வரும் வீடுகளாகக் காணப்பட்டதுடன் எந்த வீட்டுக்கும் தேவையான நிதி ஏற்பாடு மீளாய்வாண்டின் போது பெற்றுக்கொள்ளப்படாமையின் காரணமாக அந்த வீடுகளை பூர்த்தி செய்து குடியிருப்பதற்கு முடியாது காணப்பட்டதுடன் அவற்றில் 36 வீடுகள் முழுமையாக காடு வளர்ந்து காணப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க செயற்திட்டதிலிருந்து | கிராம உத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஒரு வீடு அல்லது ஒரு காணி இல்லை என்பதற்கான அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு நலன்பெறுனர்கள் தெரிவு செய்யப்பட்டனர. | செயற்திட்டத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையில் நலன் பெறுனர்களைத் தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எதிர்பார்த்த குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு அதிகார சபைக்கு முடியாதிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (உ) | அதிகாரசபையின் கொழும்பு 10 டார்லி வீதியில் அமைந்துள்ள 01 ஏக்கர் 26.5 பேச்சர்ஸ் காணியில் வீடுகள் மற்றும் வியாபார கட்டிடத் தொகுதிகளுடனான கலப்பு அபிவிருத்தி செயற்திட்டத்தினை நிர்மாணிப்பதற்காக பகிரங்க விலைமனுக் கேரப்படாது 2005 நவம்ர் 09 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் BAY SAT MBH (Pvt) Ltd. வெளிநாட்டுக் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. அக்கம்பனியுடன் 2006 யூன் 23 ஆந் திகதி மேற்கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் காணியின் பெறுமதியை அரசாங்கத்தின் பிரதான மதிப்பீட்டாளரின் ரூபா 650 மில்லியன் மதிப்பீட்டின் அடிப்படையில் அறவீடு செய்வதற்கும் 06 ஆண்டுகளில் செயற்திட்டத்தை முடிவுறுத்தியதன் பின்னர் ரூபா 162 மில்லியன் பங்கிலாபத்தை அதிகாரசபைக்கு வழங்குவதற்கும் இணங்கிக்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் BAY SAT MBH (Pvt)Ltd. கம்பனி உத்தேச அபிவிருத்திச் செயற்பாடுகளை நிறைவேற்றாது 2006 ஆம் ஆண்டிலேயே அதிலிருந்து நீங்கிக் கொண்டிருந்ததுடன் அச்செயற்பாட்டிற்காக L&T Infrasructure Development கம்பனி அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. அப்புதிய கம்பனியுடன் அதிகார சபை 2016 ஆம் ஆண்டின் போது உடன்படிக்கை செய்து கொள்ளும் போது காணிக்காக புதிய மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றுக்கொள்ளாது 10 | கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானவை வழக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | செயற்திட்டத்திற்காக நிறுவனங்களைத் தெரிவுசெய்யும் போதும் காணிகளை வழங்கும் போதும் முறையான நடைமுறைக்கு இணங்க மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் உடன்படிக்கை செய்யும் போது தேவையான அனைத்து நிபந்தனைகளையும் அதில் உள்ளடக்குதல் வேண்டும். மேலும் மேற்பார்வை நடவடிக்கைகளை தொடர்ச்சியாக அதிகார சபை மேற்கொள்ளுதல் வேண்டும். |

ஆண்டுகளுக்கு முன்னர் 2006 ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதியான ரூபா 650 மில்லியன் பெறுமதிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(ஊ) மேலும் மேற்கூறிய செயற்திட்டத்திற்காக 2016 மே 05 ஆந் திகதி உடன்படிக்கையின் கீழ் பணத்தை BAY SAT MBH (Pvt) Ltd நிறுவனத்திற்குச் செலுத்துவதற்கு முன்னர் கம்பனியால் 983 ஆம் இலக்க உறுதியின் மூலம் 2016 மே 05 ஆந் திகதியே அக்காணியின் உரிமை L&T Infrasture Development கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 712 மில்லியனை வெளிநாட்டுப் பணத்தில் செலுத்த வேண்டியுள்ளது. எனினும் அதற்கு முரணாக காணியின் இலக்கம் 2,3,4 ஆகிய துண்டுகளான 3 காணி பகுதிகள் சம்பத் வங்கிக்கு அடகு வைக்கப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 800 மில்லியன் பணத்தில் 2016 மே 05 ஆந் திகதி சம்பத் வங்கியின் இரண்டு காசோலைகளின் மூலம் இக்கொடுப்பனவு செய்யப்பட்டது.

(எ) எவ்வாறாயினும் மேற்கூறிய செயற்திட்டத்தின் கீழ் 2017 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையும் L&T Infrasture Development கம்பனியால் உத்தேச அபிவிருத்திச் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. இதற்கு மத்தியில் கம்பனியால் OAK என்ற பெயரிலான கம்பனிக்கு இக்காணியின் 05 ஆம் இலக்க காணித் துண்டு ஒரு உறுதியின் மூலம் விற்கப்பட்டிருந்ததுடன் OAK

| | | | |
|---|---|---|---|
| | கம்பனி அந்த உறுதியினை மக்கள் வங்கியில் அடமானம் வைத்து ரூபா 950 மில்லியன் கடன் பணம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த து. அதிகார சபையினால் விற்கப்பட்ட உறுதி செல்லுபடியற்றதாக்கப்பட்ட போதிலும் உச்ச நீதிமன்ற வழக்கு தீர்ப்பு வழங்கப்படும் வரை காணியினை பயன்படுத்தும் உரிமை OAK கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. | | |
| (ஏ) | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் நாவல பறங்கியா கும்புர எனும் பெயருள்ள 05 ஏக்கர் 10 பேச்சர்ஸ் காணி அமைச்சரை தீர்மானத்திற்கு இணங்க 2004 ஆம் ஆண்டின் போது 03 ஆண்டுகளுக்குள் வீடமைப்புத் தொகுதியை நிர்ணயிப்பதற்காக உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் அக்காணியின் அரசாங்க மதிப்பீட்டுப் பெறுமதியான ரூபா 75 மில்லியனுக்கு Eco Home Lanka Ltd. என்ற கம்பனிக்கு நிபந்தனையுடன் தெளிவான உறுதியின் மூலம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அக்காணியை ஒப்படைக்கும் போது 2004 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுப் பெறுமதியான 121.5 மில்லியனுக்கு பதிலாக 2003 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுப் பெறுமதியான ரூபா 75 மில்லியனுக்கு ஒப்படைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் அது 2004 மதிப்பீட்டுப் பெறுமதியினை விட ரூபா 46.5 மில்லியன் குறைவடைந்திருந்தது. | செயற்திட்ட நடவடிக்கைகளை அவர்களுக்கே வழங்குமாறு வழக்கு தொடுக்கப்பட்டிருந்தது. வாடகைக்கு வழங்கியது 2023-01-31 ஆந் திகதி வரை மாத்திரமாகும். | செயற்திட்டத்திற்காக நிறுவனங்களை தெரிவுசெய்யும் போதும் காணிகளை வழங்கும் போதும் முறையான நடைமுறையின்படி மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் உடன்படிக்கை செய்யும் போது உரிய நிபந்தனைகளை அதில் உள்ளடக்குதல் வேண்டும். மேலும் மேற்பார்வை நடவடிக்கைகளை தொடர்ச்சியாக அதிகார சபை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஐ) | மேலும் மேற்கூறிய காணியை பொறுப்பேற்ற கம்பனியால் உடன்படிக்கை செய்யப்பட்டவாறு அபிவிருத்தி செயற்திட்டங்களை | | |

அமுல்ப்படுத்துவதற்கு பதிலாக ஒப்படைக்கப்பட்ட காணியில் 29.44 பேச்சஸ் இனை ரூபா 196.5 மில்லியனுக்கு செலின்கோ ஹொஸ்பிடல்ஸ் சர்விஸ் கம்பனிக்கு 2006 ஆம் ஆண்டின் போது விற்கப்பட்டிருந்தது. அதற்கு மத்தியில் மிகுதியான காணியை செலான் வங்கிக்கு அடமானம் வைத்து ரூபா 697.5 மில்லியன் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த து. எவ்வாறாயினும் செயற்திட்ட செயற்பாடுகளை நிறைவேற்றாத போது எடுக்கப்பட்ட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான நிபந்தனைகள் உடன்படிக்கையில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் 1979 இன் 17 ஆம் இலக்க தேசிய வீடமைப்பு அதிகார சபை அதிகாரச் சட்டத்தின் 8(1) ஆம் பிரிவின் கீழ் 2020 யூன் 26 ஆந் திகதி அதிகார சபையினால் உறுதி இரத்துச்செய்யப்பட்டிருந்ததுடன் கம்பனி அதற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்திருந்தது. இதற்கு மத்தியில் 2020 வரை வீட்டுத் தொகுதியை நிர்மாணிக்கும் நடவடிக்கை நிறைவேற்றப்படாமையின் காரணமாக அதிகார சபைக்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 4.5 மில்லியன் என அதிகார சபையினால் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(ஒ) மேற்கூறிய காணி சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தும் 2020 செப்தெம்பர் 01 ஆந் திகதிய 15/2020 ஆம் இலக்க பணிப்பாளர் சபை தீர்மானத்தின் மூலம் இக்காணியானது பெறுகை நடைமுறைகள் இன்றியும் உடன்படிக்கை இன்றியும் ஒரு தனியார் கம்பனிக்கு மாதாந்த

வாடகை ரூபா 100,000 தொகைக்கும் அது 2022 ஆம் ஆண்டு ஒக்தோபர் 01 ஆந் திகதியிலிருந்து ரூபா 500,000 வரை அதிகரிக்கப்பட்டு நீர் வழங்கல் உபகரண களஞ்சியத்தை செயற்படுத்துவதற்காக வழங்கப்பட்டிருந்தது. எனினும் அன்று வரை எகோ ஹோம் கம்பனியின் பெரிய அளவான கொங்கிரீட் கலக்கும் இயந்திரம், பெகோ இயந்திரம், ஒரு ஜெனரோடர் என்பன காணியில் அழிவடைவதற்கு இடமளிக்கப்பட்டிருந்ததுடன் 14 நாட்களுக்குள் அப்புறப்படுத்துமாறு 2021 மே 31 ஆந் திகதிய கடித்தின் மூலம் பொது முகாமையாளரினால் அக்கம்பனிக்கு தெரியப்படுத்தியிருந்தும் அந்த உபகரணங்கள் இந்த அறிக்கைத் திகதி வரை அப்புறப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஓ) மேற்கூறிய விடயங்களின் பிரகாரம் அதிகார சபையினால் செயற்திட்டத்திற்காக காணிகளை வழங்கும் போது முறைப்படியாக பெறுகை நடவடிக்கைகளை பின்பற்றாமை தேவையான நிபந்தனைகளை உள்ளடக்கி சரியாக உடன்படிக்கைகள் தயாரிக்கப்படாமை, நிர்ணயிக்கப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதிகள் பெற்றுக்கொள்ளப்படாமை, முறையான மேற்பார்வைகளுடன் நடவடிக்கை எடுக்கப்படாமை ஆகிய விடயங்களின் காரணமாக செயற்திட்ட குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு முடியாமையால் அதிகார சபையின் குறிக்கோள்களை பொது மக்களின் நலன்களை வழங்கும் வகையில் அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது.

**3.3. செயற்பாட்டு செயற்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2016 ஆம் அண்டில் ஆரம்பிக்கப்பட்ட மற்றும் 19 மாதங்களிலிருந்து 47 மாதங்கள் வரையான கால எல்லைக்குள் பூர்த்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட உயர்ந்த வருமானம் பெறும் 2,503 நபர்களுக்காக அமுல்ப்படுத்தப்பட்ட அனைவருக்கும் வீடுகள் நிகழ்ச்சித்திட்டத்தின் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான செயல்முன்னேற்றம் 41 சதவீத மட்டத்தில் காணப்பட்டதுடன் 1,463 வீடுகளின் வேலைகள் முடிவடைந்திருக்கவில்லை. | 4 செயற்திட்டங்களில் 2 செயற்திட்டங்கள் மக்களின் உரிமைக்காக ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஒரு செயற்திட்ட பராமரிப்பு நடவடிக்கை இறுதிக் கட்டத்தில் காணப்பட்டது. | தொடர்ச்சியான செயற்திட்டத்தை முடிவுறுத்துவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது மிகிந்து வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 750 மில்லியன் செலவில் 2,000 அலகுகளின் வேலைகளை ஆரம்பிப்பதற்கும் அதற்கு மத்தியில் 500 அலகுகளின் வேலைகளை பூர்த்தி செய்வதற்கும் திட்டமிடப்பட்டிருந்தும் 1242 அலகுகளின் வேலைகளை ஆரம்பிப்பதற்கும் 299 அலகுகளின் வேலைகளை பூர்த்தி செய்வதற்கும் முடியாதிருந்தது. அந்த நிகழ்ச்சித்திட்டங்களின் செயல்முன்னேற்றம் 27 சதவீதம் மாத்திரமாக இருந்தது. | பௌத்த விவகார திணைக்களத்தின் மூலம் உரிய பெயர்ப்பட்டியலை அனுப்புதல் தாமதமடைந்ததனால் 758 வீடுகளை மாத்திரம் ஆரம்பிக்க கூடியதாக இருந்தது. | செயற்திட்டங்களை திட்டமிடும் போது உரிய அனைத்து தகவல்களையும் கால அட்டவணைக்கு திட்டங்கள் தயாரித்தல் வேண்டும். |
| (இ) | மாதிரிக் கிராமங்கள் மற்றும் செவன உதவி ஆகிய நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் 730 வீடுகளின் வேலைகளை பூர்த்திசெய்வதற்கு மீளாய்வாண்டின் போது திட்டமிடப்பட்டிருந்தும் மாதிரிக் கிராம உதவி நிகழ்ச்சித்திட்டம் சம்பந்தமாக எதுவித நடவடிக்கையும் | அரசாங்க நிதி ஏற்பாடு ஒதுக்கீடு ஒதுக்கீடு செய்யப்படாததனால் தொடர்ச்சியான நிகழ்ச்சித்திட்டங்களில் குறிப்பிடத்தக்க அளவு செயல்முன்னேற்றங்கள் இருக்கவில்லை. | தொடர்ச்சியான செயற்திட்டங்களை பூரணப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் தொடர்ச்சியான செவன உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஒரு வீடு மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | வீடுகள் சார்ந்த செயற்பாடுகளின் கீழ் வீட்டுத் தொகுதிகளை திருத்தம் செய்தல் மற்றும் வீட்டு இழப்பீடுகளை வழங்குவதற்காக ரூபா 110 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் மீளாய்வாண்டில் அச்செயற்பாடுகள் இடம்பெற்றிருக்கவில்லை. மேலும் 2016 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டுவரை அமுல்ப்படுத்தப்பட்ட 13 வீடமைப்பு கடன் மற்றும் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிர்மாணிப்பதற்கு வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட 150,770 வீடுகளுக்கு மத்தியில் மீளாய்வாண்டின் இறுதிவரை 55,525 வீடுகள் அல்லது 37 சதவீதம் மாத்திரம் பூர்த்திசெய்யப்பட்டிருந்ததுடன் வேலை ஆரம்பிக்கப்பட்ட 4,987 வீடுகளின் வேலைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. | தேவையான நிதி ஏற்பாடு திறைசேரியிடமிருந்து கிடைக்காமையின் அடிப்படையில் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன. | தொடர்ச்சியான செயற்திட்டங்களை பூரணப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.4 ஏனைய அமைப்புக்களுக்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்**

......................................................................................

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| .................................................. | ............................. | ............... |
| 2003 மே 30 ஆந் திகதிய 12 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 9.4 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரு நிறுவனத்தின் ஊழியர்கள் வரிசை அமைச்சிற்கு அல்லது ஏனைய நிறுவனத்திற்கு அமைச்சரவையின் அங்கீகாரமின்றி விடுவிக்கமுடியாததுடன் அவ்வாறு முறையான அங்கீகாரத்தின் அடிப்படையில் விடுவிக்கப்படுமாகவிருந்தால் அக்காலத்தில் எதுவித கொடுப்பனவும் மேற்கொள்ளப்படாதிருத்தல் வேண்டும். எனினும் அதற்கு முரணாக அதிகாரசபையின் 07 உத்தியோகத்தர்கள் அமைச்சு, கூட்டுத்தாபனம் மற்றும் கம்பனிகளுக்கு | வீடமைப்பு அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள வீட்டு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு சமாந்தரமாக கடமைகள் மேற்கொள்ளப்படுவதனால் 05 உத்தியோகத்தர்களுக்கு சம்பளமும் படிகளும் மீளளிப்புச் செய்யப்படவில்லை. | முகாமைத்துவத்தினால் சுற்றிக்கை அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

விடுவிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை அந்த உத்தியோகத்தர் சம்பளமும் படிகளுமாக மொத்தமாக ரூபா 3.6 மில்லியன் பணம் அதிகார சபையினால் செலுத்தப்பட்டிருந்தது.

### 3.5 மனிதவளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபையின் அங்கீகரித்த பதவியணியினர் 2,164 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியிணர் எண்ணிக்கை 2161 ஆகும். எவ்வாறாயினும் ஒவ்வொரு பதவியையும் பகுப்பாய்வு செய்த போது 670 வெற்றிடங்களும் 233 மிகைகளும் காணப்பட்டன. | அங்கீகரித்த பதவியணியினர்களை நியமிக்கும் போது வெற்றிடங்கள் 670 மற்றும் மிகையான பதவியணியினர்கள் 232 ஆகவும் இருந்தன. | ஒவ்வொரு பதவிக்குமான அங்கீகரித்த பதவியணியினர்களைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ஹம்பாந்தோட்டை மாவட்ட அலுவலகத்தில் 2015 - 2019 வரை இடம்பெற்ற ஒழுங்கீனங்கள் சம்பந்தமாக 2020 பெப்ரவரி 20 ஆந் திகதி நடைபெற்ற 03/2020 ஆம் இலக்க பணிப்பாளர் சபை கூட்டத்தின் சிபார்சின் பிரகாரம் 2020 பெப்ரவரி 21 ஆந் திகதியிலிருந்து வேலையிலிருந்து இடைநிறுத்திவைக்கப்பட்ட 05 உத்தியோகத்தர்களில் 04 உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் 2021 மார்ச் 09 ஆந் திகதியிலிருந்து குற்றப்பத்திரிகை வழங்கப்பட்டிருந்த போதிலும் அது சம்பந்தமாக 2022 யூலை மாதம் வரை ஒழுக்காற்று விசாரணைகள் நடாத்தப்படவில்லை. மேலும் வீரகெடிய வலய அலுவலகத்தில் 2017 - 2019 இற்கு இடைப்பட்ட காலத்தில் 03 உத்தியோகத்தர்களால் மேற்கொண்ட ஒழுங்கீனங்கள் சம்பந்தமாக 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்தின் பின்னர் | ஒழுக்காற்று விசாரணைகளை நடாத்தி ஒழுக்காற்று கட்டளைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஒழுங்கீனங்கள் சம்பந்தமாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |

அதாவது 2021 நவம்பர் 30 ஆந் திகதியில் நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத் தீர்மானத்திற்கு இணங்க வேலையிலிருந்து இடைநிறுத்திவைக்கப்பட்டதுடன் 2022 யூலை மாதம் வரையும் குற்றப்பத்திரிகை வழங்கப்படவில்லை. மேலும் 2021 யூலை 05 ஆந் திகதி குற்றப்பத்திரிகை ஒப்படைக்கப்பட்ட பிரதிப் பொது முகாமையாளர் (ஆதன முகாமைத்துவம்) கட்டாய விடுமுறையில் அனுப்பி ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலம் கடந்த பின்னர் ஒழுக்காற்று விசாரணைகள் நடாத்தப்பட்ட போதிலும் 2022 நவம்பர் 02 ஆந் திகதி வரையும் ஒழுக்காற்று கட்டளை வழங்கப்படவில்லை.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்.

### 4.1 ஆண்டறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2009 யூன் 03 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க அரசாங்க தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பந்தியின் பிரகாரம் அதிகாரசபை 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகளை பராளுமன்றத்தில் முன்வைத்திருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டு அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள து. | சுற்றிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 4.2 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் அதிகார சபையினால் நாளதுவரையாக்கப்பட்ட அமைப்பு திட்டம், அங்கீகரித்த பதவியணியினர், பாதீட்டுதிட்டம், வருடாந்த பெறுகை | ஒவ்வொரு பிரிவினாலும் உரிய திட்டங்கள் தயாரிக்கப்பட்டு தேவையான அங்கீகாரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டுள் ளன. | சுற்றிக்கையின் பிரகாரம் அனைத்து விடயங்களையும் உள்ளடக்கிய செயல்நடவடிக்கைத் திட்டம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| திட்டம், கட்டுநிதி தேவைப்பாட்டுத் திட்டம், உள்ளக கணக்காய்வுத் திட்டம் என்பன செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் 2021 ஆம் ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் அத்தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | | |

**4.3 உள்ளகக் கணக்காய்வு**

**.......................................**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| ................................................ | ............................. | ............... |
| மாவட்ட அலுவலகங்களினதும் அதிகாரசபைக்கும் ஒவ்வொரு பிரிவும் தொடர்பாக போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அடுத்துவரும் ஆண்டுகளின் போது அதற்காக அதிக கவனம் செலுத்தப்படும். | உள்ளகக் கணக்காய்வானது மாவட்ட அலுவலகங்களையும் செயற்பாட்டு துறைகளையும் போதியளவில்வெளிப்படுத்தும் வகையில் உள்ளக கணக்காய்வுத் திட்டம் அமுல்ப்படுத்தப்படுதல் வேண்டும். |

**4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு**

**....................................**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| ................................................ | ............................. | ............... |
| (அ) மீளாய்வாண்டின் போது அதிகாரசபையின் பங்கிலாபம், கட்டண வருமானம், செவன ஊடகப் பிரிவின் வருமானம் என்பவற்றை உள்ளடக்கிய 06 வருமான விடயங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தினை விட உள்ளபடியான வருமானம் 61 சதவீதத்திலிருந்து 1,337 சதவீதம் வரை ரூபா 676.6 மில்லியன் மிகையாக உழைக்கப்பட்டிருந்ததுடன் 06 வருமான விடயங்கள் 12 சதவீதத்திலிருந்து 52 சதவீதம் வரை மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தினை அடைந்து கொள்ள முடியாதிருந்தது. மேலும் 11 விடயங்கள் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 141.25 | வருமானம் 61 சதவீதத்திலிருந்து 1,327 சதவீதம் வரையான முரண்களுடனான தகவல்கள் சமர்பிக்கப்பட்டன. | முகாமைத்துவத்தினால் பாதீட்டினை ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியனான வருமானத்தில் மீளாய்வாண்டின் போது எந்த வருமானமும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்காத ததுடன் மதிப்பீடு செய்யப்படாத 07 வருமான விடயங்களிலிருந்து ரூபா 7,310 மில்லியன் வருமானம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கிணங்க வருமான மதிப்பீட்டினைத் தயாரிக்கும் போது நடைமுறைச்சாத்தியமான தகவல்கள் அடிப்படையாகக் கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | பாதீட்டினையும் உள்ளபடியான செலவுகளையும் ஒப்பீடு செய்த போது ஏனைய படிகளுக்காக உள்ளபடியான செலவினை விட 432 சதவீதம் மிகையாக அதாவது ரூபா 25.8 மில்லியன் மதிப்பீட செய்யப்பட்டிருந்தமை 08 செலவு விடயங்களுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தமாக ரூபா 5.19 மில்லியன் செலவுகள் 100 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தமை மேலும் மதிப்பீடு செய்யப்படாத 13 செலவு விடயங்களுக்காக ரூபா 7,167.82 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தமையால் பாதீடானது ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | முரண்பாட்டுடனான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ன. | பாதீட்டினை ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்துதல் வேண்டும். |